# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 36/2015**

திரு. H. தாவூத்கான்,
த/பெ க. ஹைதர்கான்,
உதவி மின் செயற்பொறியாளர் (ஓய்வு),
66, வி.ஜி. ராவ் நகர்,
திருப்பூர் ரோடு,
உடுமலைப் பேட்டை வட்டம் – 642 126
திருப்பூர் – மாவட்டம் ........மேல் முறையீட்டாளர்
(திரு. தாவூத்கான் & திரு. P. சந்திரசேகரன்)

எதிர்

1) செயற் பொறியாளர் / இ. பே
பழனி கோட்டம்
திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ஆர். எஸ். ரோடு
பழனி , திண்டுக்கல் மாவட்டம்.

2) உதவி செயற் பொறியாளர் /
இயக்குதலும் பராமரிப்பும் / கிராமியம்,
திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம்,
ஆர்.எஸ். ரோடு, பழனி திண்டுக்கல் மாவட்டம்.

3) உதவி பொறியாளர்
இயக்குதலும் பராாமரிப்பும் / கிழக்கு சத்திரபட்டி,
திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம்
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தெற்கு தெரு, சத்திரபட்டி அஞ்சல்,
ஒட்டன் சத்திரம் – தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம். ......... எதிர்மனுதாரர்
(திரு. K. தங்கராஜ், உதவி பொறியாளர் /
கிழக்கு சத்திரபட்டி)

<u>கேட்புரை நாள்: 28–7–2015, 15–10–2015 மற்றும் 19–11–2015</u>

<u>ஆணை நாள் : 23–12–2015</u>

திரு. H. தாவூத்கான், த/பெ ஹைதர்கான், வி. ஜி. ராவ் நகர் அவர்களின் 17.4.2015 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண் 36/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின் குறைதீர்ப்பாளர்கள் கேட்புரை 28.7.2015, 15.10.2015 மற்றும் 19.11.2015 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், இருதரப்பினராலும் கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள், சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் திரு. A. ஷேக் அப்துல்லா அவர்களின் வாதம் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழகண்ட ஆணை வழங்கப்படுகிறது.

<u>ஆணை</u>

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :</u>**

(i) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அதிகாரிகளால், சரியான முறையில் கள ஆய்வு செய்யாமலோ, அல்லது தெரிந்தோ அவர்களது குடும்பத்திற்கு சொந்தமான சத்திரப்பட்டி கிராமம் (கதவு எண்) 5/44 என்ற வீட்டிற்கு திரு. எ. அரப்ஷா சாயபு என்பவரது பெயரில் அவரது வீட்டு ரசீது 5/42–ன் படி கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்பை (1336) முழுமையாக அகற்றிட உத்தரவு பிறப்பிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

(ii) மின்குறைதீர்ப்பாளர் வேறு ஏதேனும் உத்தரவு பிறப்பிப்பதானாலும் அதனை பிறப்பிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**2. <u>வழக்கின் சுருக்கம் :</u>**

2.1 மேல்முறையீட்டாளர், காலஞ்சென்ற அவருடைய தகப்பனாருக்கு சொந்தமான கதவு எண் 5/44 சத்திரப்பட்டியிலுள்ள வீட்டிற்கு திரு. M. அரப்ஷா அவர்களின் பெயரில் 5/42 என்ற வீட்டு வரி ரசீதின்படி கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்பு எண் 1336–ஐ முழுமையாக அகற்ற

வேண்டும் என்று கோரியுள்ளார். திண்டுக்கல் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், மேல்முறையீட்டாளரின் முறையீட்டை தள்ளுபடி செய்து தீர்வு வழங்கியுள்ளது.

2.2 மேற்கண்ட மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர், தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை, மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்பித்துள்ளார்.

**3. <u>மன்றத்தின் ஆணை:</u>**

3.1 திண்டுக்கல் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வு 5.3.2015 நாளிட்ட ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"ஆணை :*

*திரு. H. தாவூத்கான் த/பெ. க. ஹைதர்கான் உடுமலைபேட்டை வட்டம் திருப்பூர் அவர்களுக்கு அறிவிப்பது யாதெனில்*

*மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள வீடு மற்றும் அதன் கதவு எண் தனக்கு சொந்தமானது என்பதற்கான வருவாய் ஆவணங்கள் ஏதும் சமர்பிக்காததாலும், மின் வழங்கல் விதி 21 மற்றும் 23 (A),(1A) விதிமீறல்கள் உள்ளன என்று தெரிவித்து மின் துண்டிப்பு கோரவில்லை என்பதாலும், மேலும் அது போன்ற விதி மீறல்கள் இல்லை என்பதாலும் தமிழ்நாடு மின்சார பகிர்மான விதி தொகுப்பின் விதி 33(4)–ன் படி இசைவு பத்திரங்களை முறித்துக் கொள்ள வேண்டும் என்று உரிமம்தாரர் எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை என்பதாலும். இந்த வழக்கு சம்மந்தமாக மின் இணைப்பு எண் 1336–ஐ நிரந்தர மின் துண்டிப்பு செய்ய இயலாது என்று இம்மன்றத்தால் தீர்வு செய்யப்படுவதால் தங்களது மனு தள்ளுபடி செய்யப்படுகிறது."*

**4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் :</u>**

4.1 ஒட்டன்சத்திரம் வட்டம், சத்திரப்பட்டி கிராமம், கதவு எண்.5/44 என்ற எண்ணுள்ள வீடு காலஞ்சென்ற அவரது தந்தை திரு.ஹைதர்கான் அவர்களுக்கு சொந்தமானது. அவரது தந்தை 15.01.1982 அன்று காலமாகிவிட்டார். அதன் பின்பு அவரது வாரிசுகள் பணி நிமித்தமாக பல ஊர்களில் இருந்து வந்தனர்.

4.2 2013–ஆம் ஆண்டு மத்தியில் அவர்களது பூர்வீக வீட்டை பராமரிப்பு செய்து குடிபோகலாமென நினைத்து சத்திரப்பட்டி சென்று பார்த்தபொழுது, மேற்படி வீட்டில் திரு. A. அரப்ஷா சாயபு என்பவர் குடியிருந்து வருவது தெரிய வந்தது. மேலும் அந்த 5/44 என்ற வீட்டிற்கு திரு. எ.அரப்ஷா சாயபு என்பவர் பெயரில் மின் இணைப்பு எண். 1336 கொடுக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது.

4.3 திரு. A. அரப்ஷா சாயபு என்பவருக்கு அவர்கள் வீட்டிற்கு கிழபுறம் உள்ள 5/42 என்ற வீடு சொந்தமானது. அந்த வீட்டில் அவரது தந்தை திரு. மதார் சாயபு என்பவர் பெயரில் மின் இணைப்பு எண். 105 பயன்பாட்டில் இருந்து வருவது தெரியவந்தது.

4.4 பின்பு அவர் 24.10.2013 மற்றும் 11.11.2013 ஆகிய தேதிகளில் உதவிப் பொறியாளர், பகிர்மானம், கிழக்கு, திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம், சத்திரப்பட்டி அவர்களுக்கு அவரின் தந்தைக்கு சொந்தமான 5/44 என்ற இலக்கமுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு எண்.1336 என்பது திரு. A. அரப்ஷா சாயபு என்பவர் பெயரில் எவ்வாறு கொடுக்கப்பட்டது எனவும், தவறுதலாக கொடுக்கப்பட்ட மேற்படி மின் இணைப்பு எண்.1336–ஐ நிரந்தரமாக கழற்றி விடும்படி கோரி விண்ணப்பித்துள்ளார். அந்த விண்ணப்பத்தின் நகலை உதவி செயற்பொறியாளர், கிராமியம், பழனி–1, செயற்பொறியாளர் / பழனி –2 மற்றும் மேற்பார்வைப் பொறியாளர், திண்டுக்கல்–3 ஆகியோருக்கும் சமர்ப்பித்துள்ளார்.

4.5 அவரது மேற்கண்ட விண்ணப்பங்களுக்கு, உதவிப் பொறியாளர் சத்திரப்பட்டி அவர்கள் அவருடைய கடிதம் தேதி 21.11.2013 வாயிலாக, மேற்படி மின் இணைப்பு திரு.எ.அரப்ஷாசாயபு என்பவர் பெயரில், கதவு எண்.5/42 என குறிப்பிடப்பட்ட பஞ்சாயத்து ரசீதுகளின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். மேலும் தற்சமயம் திரு.எ. அரப்ஷாசாயபு அவர்களின் மகன் அந்த வீட்டில் வசித்து வருவதால் மேற்படி மின் இணைப்பை துண்டிக்க இயலாது எனத் தெரிவித்தார். செயற்பொறியாளர் / பழனி அவர்கள் தனது 03.12.2013 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும், மேற்பார்வை பொறியாளர், திண்டுக்கல் அவர்கள் தனது 18.02.2014 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும் அதனையே தெரிவித்துள்ளனர்.

4.6 20.12.2013 ம் தேதியன்று செயற்பொறியாளர், பழனி அவர்களுக்கு மின் இணைப்பு எண்.1336, திரு. A. அரப்ஷா சாயபு என்பவருக்கு தாங்கள் கூறியுள்ளபடி Enjoyer என்ற அடிப்படையில் கொடுக்கப்பட்டிருந்தால், அன்னார் கொடுத்த பிணை உறுதி பத்திரம் (Indemnity Bond) நகலை கொடுத்து உதவும்படியும், மேற்படி மின் இணைப்பிற்கு Enjoyer என்ற தகுதியின் அடிப்படையில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருந்தால், தமிழ்நாடு மின் வினியோக சட்டம் பத்தி பி(4)–ன் படி கூடுதல் காப்புத் தொகையாக ரூ.400/–ஐ வசூலிக்காமைக்கு காரணத்தையும் கேட்டிருந்தார். செயற்பொறியாளர் பழனி அவர்களிடமிருந்து இதுநாள் வரை மேற்கண்ட அவரது கடிதத்திற்கு பதில் வரவில்லை.

4.7 வினியோகப்பகுதி அதிகாரிகளிடமிருந்து அவருக்கு நிவாரணம் எதுவும் கிடைக்காத காரணத்தால் 28.09.2014 திண்டுக்கல் பகிர்மான வட்டம் குறைதீர்ப்பு மையத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

4.8 16.12.2014 அன்று குறைதீர்ப்பு மன்றத்தில் நடைப்பெற்ற விசாரணையில் அவரிடம் மின் இணைப்பு எண்.1336 உள்ள வீட்டின் உரிமையாளர் காலஞ்சென்ற திரு.ஹைதர்கான் என்பவர் பெயரிலிருந்து பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா, விற்கப்பட்டுள்ளதா, என்ற விவரத்திற்கான ஆவணங்களை சமர்ப்பிக்கும்படி கோரினார்கள். 09.01.2015 அன்று உதவிப் பொறியாளர் கிழக்கு சத்திரப்பட்டி அவர்களுக்கும் மற்றும் அனைத்து அதிகாரிகளுக்கும் வில்லங்க சான்றிதழ் மற்றும் பத்திரத்தின் நகல்களை கொடுத்துள்ளார். மேலும் உதவிப்பொறியாளர், கிழக்கு, சத்திரப்பட்டி அவர்கள் தனது 21.01.2015 தேதியிட்ட கடிதம் மூலம் மேற்படி வீட்டிற்குண்டான உரிமை சான்றிதழை வட்டாட்சியரிடமிருந்து பெற்று சமர்ப்பிக்கும்படியும், பட்டா நகலை சமர்ப்பிக்கும்படியும் கோரியிருந்தார்.

4.9 அது சம்மந்தமான ஆவணங்களை 30.01.2015 அன்று உதவிப்பொறியாளர், கிழக்கு, சத்திரப்பட்டி அவர்களுக்கு சமர்ப்பித்தேன். அந்த கடிதத்தில் நகலை அனைத்து ஆவணங்களின் நகல்களுடன் அனைத்து அதிகாரிகளுக்கும் சமர்ப்பித்துள்ளார்.

4.10 மின் இணைப்பு எண்.1336, திரு. A.அரப்ஷா சாயபு என்பவர் பெயரில் கதவு எண்.5/42 என்ற ரசீதின் அடிப்படையில் 5/44 என்ற வீட்டிற்கு 28.10.2008 அன்று கொடுக்கப்பட்டுள்ளது. அன்றைய தேதியில் உண்மையான 5/42 என்ற எண்ணுள்ள வீட்டில் மின் இணைப்பு எண்.105 என்பது பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது. இதன் மூலம் ஒரே எண்ணுள்ள வீட்டிற்கு இரு மின் இணைப்புகள் விதிகளுக்கு முரணாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

4.11 கள ஆய்வின்பொழுது மின் இணைப்பு 105 உள்ள வீடு 5/42 என்பதும் அதன் மேற்கு பக்கம் தொட்டாற்போல் உள்ள 5/44 என்ற வீடு என்பதும் கள ஆய்வு செய்த அதிகாரிக்கு நன்றாகவே தெரிந்திருக்கும். அல்லது அதிகாரி சரியாகவோ அல்லது ஆய்வு செய்யாமலோ 5/42 என்ற கதவு இலக்க வீட்டு இரசீதை அடிப்படை ஆவணமாகக் கொண்டு 5/44 என்ற வீட்டிற்கு மின் இணைப்பு 1336–ஐ கொடுத்திருக்க வேண்டும்.

4.12 குறைதீர்க்கும் மன்றம் மின் வழுங்கல் விதி எண்.21 மற்றும் 23(A)(1A) ன்படி விதி மீறல்கள் உள்ளன என்று தெரிவித்து மின் துண்டிப்பு கோரவில்லையென தெரிவித்துள்ளனர். மேற்படி இரண்டு விதிகளும் சரியான முறையில் சரியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, சரியான முறையில் கள ஆய்வுகள் உரிய அதிகாரிகளால் செய்யப்பட்டு, விதிமுறைகளின்படி மின் இணைப்பு கொடுக்கப்பட்டு, அந்த மின் இணைப்பில் மின் கட்டண நிலுவை மற்றும் மின் திருட்டு போன்ற விதிமீறல்கள் இருந்தால் மின் இணைப்பை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் துண்டிக்க வகைசெய்யும் உத்தரவு ஆகும்.

4.13 தமிழ்நாடு மின்சார பகிர்மான விதி தொகுப்பின் விதி எண் 33(4) என்பது, தமிழ்நாடு, மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மின்சார பகிர்மான விதி தொகுப்பு விதி எண்.27 ஐ முழுமையாக சரியான முறையில் எவ்விதமான தவறுகளும் இல்லாமல், உரிய ஆவணங்களை மின் இணைப்பு கொடுக்கும் முன்பே பெற்று அதன் நம்பகத்தன்மையை சோதித்து உரிய கள ஆய்வுகள் செய்து, சரியான முறையில் கொடுக்கப்பட்ட மின் இணைப்புகளுக்கே பொருந்தும்.

4.14 அவர் மின் துண்டிப்பு கோருவது மின் பகிர்மான அதிகாரிகளால் தவறான ஆவணத்தின் அடிப்படையில் தவறான இடத்தில் கொடுக்கப்பட்ட மின் இணைப்பாகும். மின்வாரிய

அதிகாரிகள் தங்களது பணியின் மெத்தன தன்மையால் சரியான ஆவணங்கள் இன்றி தவறாக இடத்தில் கொடுக்கப்பட்ட மின் இணைப்பிற்கு, அந்த இடத்தின் உண்மையாக உரிமையாளரை பலிகடா ஆக்குவது சரியல்ல.

4.15 குறைதீர்க்கும் மன்றம் கோரிய அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ளார். ஆனால் குறைதீர்க்கும் மன்றம் தனது ஆணையில் வருவாய் ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கவில்லையென முரண்பாடான தகவலை தெரிவித்துள்ளனர். மேலும் குறைதீர்க்கும் மன்றமோ அல்லது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அதிகாரிகளோ தற்சமயம் மின் இணைப்பு எண்.1336 கொடுத்துள்ள திரு.எ. அரப்ஷாசாயபு என்பவரிடம் எந்தவிதமான ஆவணங்களையும் கோரவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

4.16 குறைதீர்க்கும் மன்றம், திண்டுக்கல் தனது ஆணையில் பக்கம் 6 கடைசி 4வது வரியில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளளர்.

> *“சொத்து சம்மந்தமான உரிமையை முடிவு செய்வதற்கு தகுதி வாய்ந்த உரிமையியல் நீதிமன்றத்திற்குதான் அதிகாரம் உண்டு. மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு அந்த அதிகாரம் இல்லை. “*

4.17 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான அதிகாரிகளை சட்டப்படி மற்றும் நடைமுறையிலுள்ள மின் விநியோக விதிகளின்படி தேவையான ஆவணங்களை பெறாமலும், பெறப்பட்ட ஆவணங்களின் நம்பகத்தன்மையை ஆய்வு செய்யாமலும், உரிய கள ஆய்வுகள், விசாரணைகள் செய்யாமலும் அல்லது மேற்கூறியவைகள் அனைத்தையும் சரியாக செய்தும், தவறான இடத்தில் தவறான நபர் பெயரில் அனைத்தையும் தெரிந்திருந்து, ஏதோ சில பல காரணங்களால் தன்னிச்சையாக அதிகார துஷ்பிரயோகம் செய்து மின் இணைப்பைக் கொடுத்து விட்டு, உண்மையான இடத்தின் உரிமையாளரை நீதிமன்றங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்துவது மிகவும் கொடுமையான அராஜகமான செயல் என்றும் தெரிவித்துள்ளார்.

5. **<u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>**

5.1 மேல் முறையீட்டாளர் திரு. H. தாவூத்கான் த/பெ ஹைதர்கான் அவர்களால் மின்துண்டிப்பு செய்ய கோரப்படும், உதவி மின் பொறியாளர் / கிழக்கு சத்திரப்பட்டி பிரிவிற்குட்பட்ட சத்திரப்பட்டி பகிர்வு மின் இணைப்பு எண்: 1336, ஆனது கடந்த **28.10.2008** அன்று திரு. M. அரப்ஷா என்பவரால் சமப்பிக்கப்பட்ட வீட்டுவரி ரசீதின் பேரில், அதில் குறிப்பிடப்பட்ட கதவு எண்: 5/42 கொண்ட வீட்டிற்குத்தான் உரிய களஆய்வு செய்து வழங்கப்பட்டு உள்ளது.

5.2 மேலும் மின் இணைப்பு வழங்கப்பட்ட போது இருந்த திரு. M. அரப்ஷா அவர்கள் தற்போது காலமாகி விட்ட சூழ்நிலையில், அன்னாரது மகன் தமது குடும்பத்தாருடன் மேற்படி வீட்டில் குடியிருந்து வருவதால் அன்னார், அனுபோகஸ்தர் (Enjoyer) என்ற நிலைக்குட்பட்டு, மேற்படி மின் இணைப்பின், மின்சாரத்தினை நுகர்வு செய்து வருகிறார் என்ற பொருள்படும்படிதான் விபரம் தெரிவிக்கப்பட்டு, குடிநீர், மின்சாரம் போன்ற அடிப்படை மனித உரிமைகளுக்கு மீறல் ஏதும் நடந்து விடக்கூடாது என கருதி, மின் துண்டிப்பு செய்ய இயலாது என்று பதில் தெரிவிக்கப்பட்டது.

5.3 முறையீட்டாளர் அவர்கள் அதனை தவறான புரிதலில் கருத்தில் கொண்டு, ஏதோ தற்போதுள்ள அனுபோகஸ்தருக்கு நேரிடையாக மேற்படி மின் இணைப்பினை வழங்கியுள்ளனர் எனும் நோக்கத்தில் பிணை உறுதி பத்திரம் நகல் கொடுத்து உதவும் படியும், மின் விநியோக சட்டம், பத்தி (பி (4)–ன் படி கூடுதல் காப்பு தொகை ரூ.400/– வசூலிக்கப்படாமைக்கு காரணத்தினை தெரிவிக்கும்படியும் கோரி கடந்த **20.12.2013** அன்று செயற்பொறியாளர் / பழனி அவர்களுக்கு கடிதம் எழுதியும் பதில் வரவில்லை என்று மேன்மை மிகு மின் குறைதீர்ப்பாளர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வந்துள்ள புகார், மேற்சொன்ன காரணம் நிமித்தம் ஏற்புடையதல்ல என்று பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

5.4 மி.இ.எண் : 1336, அமைந்துள்ள வீட்டிற்கு மேல் முறையீட்டாளர் தான் தற்போதைய உரிமையாளர் எனில் நாளது தேதியில் உரிமைசான்று மற்றும் பட்டா ஆகியவற்றினை தாசில்தார் அலுவலகம் மூலம் பெற்றுத்தரும்படி உ.மி.பொ/கி/ச.பட்டி அலுவலக கடிதம் நாள் : **21.01.15–ன்** படி கோரப்பட்டதற்கு, மேல்முறையீட்டாளர் அதுகுறித்த ஆவணங்களை தற்போது வரை சமர்பிக்கவில்லை என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. மாறாக, அன்னாரால் சமர்ப்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள ஆவணங்கள், நத்தம் நிலவரி திட்டம் பட்டா (ஒரிஜினல் பட்டா கோரப்பட்டது ஆனால் அதுவும் நகல் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது) மேல்முறையீட்டாளர் பெயரில் இல்லை என்பதும், கோரப்படாத ஆவணங்களான வாரிசுரிமைச் சான்று நகல், வில்லங்கசான்று மற்றும் அதிகாரம் பெற்ற நபர் மேலொப்பமிடாத கூட்டு வரைபட நகல் ஆகியவை, மேல்முறையீட்டாளர் கோரிக்கையின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்புடையது இல்லை.

5.5 **05.03.15** அன்று நடைபெற்ற மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில், மி.இ.எண்: **1336–ன்** தற்போதைய நுகர்வோர் திரு. A. ஷேக்அப்துல்லா த/பெ M. அரப்ஷா சாயுபு (லேட்) அவர்களிடம் உ.மி.பொ./கி/ச.பட்டி அலுவலக கடிதம் எண்: **17**, நாள் **21.01.15**ன்படி வருவாய் ஆவணங்கள் கோரியிருந்தும், அன்னார் எவ்வித ஆவணங்களும் (வீட்டுவரி ரசீது மற்றும், குடிநீர் கட்டண ரசீது நீங்கலாக) நாளது தேதி வரையில் சமர்ப்பிக்கவில்லை என்ற விபரம், உ.மி.பொ/கி/ச.பட்டி அவர்களால் நேரிடையாக தகவல் தெரிவிக்கப்பட்டது. அதுசமயம் மேற்படி கூட்டத்திற்கு ஆஜரான மேல் முறையீட்டாளர் அவர்களுக்கும் மேற்படி விபரம் தெரிந்தும், மீண்டும் அவைகளை பெற்றுத்தர கோரியிருப்பது ஏற்புடையதல்ல.

5.6 மின் இணைப்பு எண்: **1336** ஆனது தமிழ்நாடு மின்சார வழங்கல் விதிகளின்படி, வரையறுக்கப்பட்ட ஆவணங்களில் ஒன்றான வீட்டின் உரிமையாளர் என்பதற்கான பஞ்சாயத்து வீட்டுவரி ரசீது மின் இணைப்பு கோரும் விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்டதின் பேரில், மேற்படி வீட்டுவரி ரசீதில் கொடுக்கப்பட்ட கதவு எண் : **5/42–ஐ** சம்பந்தப்பட்ட வீட்டின் நுழைவு

வாயிற்கதவில், வீட்டுவரி ரசீது வழங்கிய அதே சத்திரப்பட்டி பஞ்சாயத்து நிர்வாகம் மூலம் பொருத்தப்பட்டுள்ள இரும்புத்தகட்டில் (ஏற்கனவே இதன் புகைப்படம் ஒரிஜினல் மற்றும் நகல் – மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது) குறிப்பிடப்பட்ட கதவு எண்ணோடு கள ஆய்வு செய்த பின்பு தான் கடந்த 28.10.2008 அன்று வழங்கப்பட்டுள்ளது.

5.7 மற்றொரு மின் இணைப்பு எண் : 105 (தற்போதைய நிலையில் மின் கட்டண நிலுவைக் காரணமாக நிரந்தர மின் துண்டிப்பு செய்யப்பட்டு விட்டது) இருந்ததாக கூறப்படும் வீட்டினையும் கள ஆய்வு செய்தபோது கதவு எண் : 5/44 என்ற எண் கொண்ட வீட்டிற்குத்தான் (இன்றும் மேற்படி கதவு எண் சம்பந்தப்பட்ட வீட்டின் முதன்மை வெளிப்புற நுழைவு வாயிற்கதவில் குறிப்பிடப்பட்டு காணப்படுகிறது) திரு.மதர்சாயுபு என்பாரது பெயரில் வழங்கப்பட்டு வந்துள்ளது என்ற விபரம் தெரியவருகிறது எனவே ஒரே எண்ணுள்ள வீட்டிற்கு இரு மின் இணைப்புகள் விதிகளுக்கு முரணாக கொடுக்கப்பட்டுள்ளது என்ற புகார் மறுக்கப்படுகிறது.

5.8 மேல்முறையீட்டாளர், மி.இ.எண்: 1336–ஐ மின்துண்டிப்பு செய்ய கோரும் கோரிக்கையின் மூலம், தமக்கு கிடைக்கப்பட வேண்டியதாய் இருக்கும் பூர்வீக சொத்தின் மீதான தமது உரிமையை மட்டும் (ஏனெனில், மேல் முறையீட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள், வாரிசுரிமை சான்று ஆகியவற்றினைக் கொண்ட சீர்நோக்கும் போது, மற்றபடி மின்துண்டிப்பு கோரப்படும் மின் இணைப்பு கொண்ட வீட்டிற்கு முறையீட்டாளர் அவர்களோடு சேர்த்து மேலும் ஆறுபேர் வாரிசுதாரர்களாக வருகின்றனர்) நிலை நாட்டி விடலாம் என்று தவறாக கருதி கொண்டிருக்கிறார். தற்போதைய சூழலில் மேல் முறையீட்டாளாரோ அல்லது பிற வாரிசுகளோ சம்பந்தப்பட்ட வீட்டிற்கு, இன்றைய தேதியில் உரிமையாளர் அல்லது உரிமையாளர்கள் தான் என்பதை ஆதாரபூர்வமாக எடுத்துறைக்க உரிய வட்டாட்சியரிடமிருந்து முக்கிய வருவாய் ஆவணங்களான உரிமைச்சான்று (நான்கு மாலுடன்) மற்றும் பட்டா ஆகியவற்றினை பெற்று சமர்ப்பிக்கவில்லை. மாறாக முறையீட்டாளரின் தகப்பனாரான காலஞ்சென்ற திரு. K. ஹைதர்கான் என்பவருடைய பெயரில் மட்டுமே உள்ளதால் இது

விஷயத்தில் வாதத்திற்கு சொல்வதெனில் ''சட்ட பரிகாரம்'' தேடாத நிலையில் – மேல் முறையீட்டாளர் மட்டுமே, தவறாக மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படும் வீட்டிற்கான தற்கால உரிமையாளர் என்ற தகுதியை இழந்தே காணப்படுகிறார் என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

5.9 ஒரு நுகர்வோர் அல்லது விண்ணப்பதாரரால் மின் இணைப்பு கோரும் சமயத்தில் எந்தெந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுகிறதோ அதன்பேரில் தான் அதிகாரம் பெற்ற வாரிய அலுவலர் அல்லது பணியாளர் ஆகியோரின் கள ஆய்வு அமையும். எனவே கடந்த 28.10.2008 அன்று வழங்கப்பட்டுள்ள பஞ்சாயத்து வீட்டு வரி ரசீதின்படி தான் கதவு எண்: சரிபார்க்கப்பட்டு, 5/42 என்ற எண் கொண்ட வீட்டிற்கு மின் இணைப்பு 1336 வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சம்பந்தப்பட்ட வீட்டின் நம்பகத்தன்மை சரியாகத்தான் சோதிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

5.10 மின் பகிர்மான ஒழுங்குமுறை விதி 33(4) மற்றும் (27) ஆகியவற்றினை மேற்கோள்காட்டி தாம் மின்துண்டிப்பு கோரும் மின் இணைப்பு பகிர்மான அதிகாரிகளால் தவறான ஆவணத்தின் அடிப்படையில், தவறான இடத்தில் கொடுக்கப்பட்ட மின் இணைப்பு என்றும் அவர்கள் தங்களது பணியின் மெத்தனத் தன்மையால் சரியான ஆவணங்கள் இன்றி தவறான இடத்தில் கொடுக்கப்பட்ட மின் இணைப்பால், உண்மையான உரிமையாளரை பலிகடா ஆக்குவது சரியல்ல என்ற கூற்று இதன்மூலம் மறுக்கப்படுகிறது. ஏனெனில் மின் இணைப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து சுமார் 5 வருடங்களுக்குப் பிறகு, மின் துண்டிப்பு செய்யக்கோரும் கோரிக்கையின் அடிப்படை விபரம் தெரியாமல், மேல்முறையீட்டாளர், எப்படியாவது மின் துண்டிப்பு நடவடிக்கையை வாரியத்தின் மூலம் எடுக்கச் செய்து விடலாம் என்றும், அவ்வாறு செய்து விட்டால் தாம் தான் சம்பந்தப்பட்ட வீட்டிற்கு உரிமையாளர் என்பதையும் நிரூபித்து விடலாம் என்ற முரண்பாடான நிலையில் இருந்து வருகிறார், என்றும் இதன்மூலம் கருதப்படுகிறது.

5.11 மேலும் கடந்த 20.04.15 அன்று சத்திப்பட்டி பஞ்சாயத்து அலுவலகம் சென்று கதவு எண் 5/42 கொண்ட வீட்டிற்கு வழங்கப்பட்ட வீட்டுவரி ரசீது விபரங்கள் குறித்து உ.மி.பொ/கி.ச.பட்டி அவர்களால் நேரிடையாக ஆய்வு மேற்கொண்டபோது, கடந்த 2014–15 நிதியாண்டு வரையில் வீட்டுவரி ரசீது கோரப்பட்டுள்ளது என்று கண்டறிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5.12 இவ்வாறான நிலையில் மேற்படி மி.இ.எண்: 1336, தவறான முகவரிக்குத்தான் வழங்கப்பட்டுள்ளது என்று முறையீட்டாளர் கூறுவதனை வாதத்திற்காக எடுத்துக்கொண்டாலும் கூட, மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் அன்னாரால் கொடுக்கப்பட்ட மனு எண் : 05/07.10.14–ன் படி பிறப்பிக்கப்பட்ட ஆணையில் (நாள் : 05.03.15) சுட்டிக்காட்டியுள்ள மின்சார வழங்கல் விதி எண்: 21, 23 A(1A) மற்றும் பகிர்மான விதி தொகுப்பு விதி எண் : 33(4) ஆகியவற்றின் படியும், மின் இணைப்பு வழங்கப்படும்போது பெறப்பட்ட ஆவணத்தின் பேரிலும் (வீட்டுவரி ரசீது) மி.இ.எண் : 1336 – ஆனது மின் துண்டிப்பு செய்யும் நடவடிக்கைக்கு உட்பட்டு வரவில்லை என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5.13 மேல் முறையீட்டாளரால், மின் குறை தீர்ப்பாளர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பெற்றுள்ள மி.இ.எண் : 1336 – சத்திப்பட்டி பகிர்வின் மீதான மின் துண்டிப்பு கோரிக்கையை, மேற்படி மின் இணைப்பு பெற்றவரான திரு. M. அரப்ஷா என்பவரும், முறையீட்டாளர் வழங்கிய ஆவணங்களின்படி உரிமையாளராக இருக்கக் கூடும் என்று கருதப்படுபவருமான திரு.H.ஹைதர்கான என்பவரும் தற்போது காலமான சூழ்நிலையில், மேற்படி மின் இணைப்பு உள்ள வீட்டில் திரு. M. அரப்ஷா அவர்களின் வாரிசு மட்டுமோ அல்லது வேறு எந்தவொரு நபரோ குடி இருந்து வந்தாலும் கூட, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமறை ஆணையம் வகுத்துள்ள விதிகளுக்கு உட்படாவிடின் மின்துண்டிப்பு போன்ற நடவடிக்கையை கண்டிப்பான முறையில் மேற்கொள்ளக்கூடாது என்பதாலும் அவ்வாறு மின்துண்டிப்பு போன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டால் அது மனித உரிமை மீறல் என்ற நிகழ்விற்கு உட்பட்டு, தவறான முன்உதாரணத்தினை ஏற்படுத்திவிடக்கூடும் என்பதாலும், மேன்மைமிகு மின் குறை தீர்ப்பாளர்

அவர்கள், மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை நிராகரித்து உத்திரவு பிறப்பிக்கும்படி பணிந்து வேண்டப்படுகிறது.

6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

6.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 28.7.2015, 15.10.2015 மற்றும் 19.11.2015 ஆகிய நாட்களில் மின்குறைதீர்ப்பாளர் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளரும் அவர்சார்பில் திரு P. சந்திரசேகரன் அவர்களும் 28.7.2015 கலந்து கொண்டு தங்களது தரப்பு வாதத்தை எடுத்துரைத்தனர். 15.10.2015–ல் மேல்முறையீட்டாளர் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை உரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் –3, திரு.K. தங்கராஜ், உதவி பொறியாளர், கிழக்கு சத்திரபட்டி அவர்கள் மூன்று நாட்களில் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார். திரு. A. சேக் அப்துல்லா, த/பெ அரப்சா என்பவர் தான் மேற்கண்ட மின் இணைப்பை உபயோகித்து வருவதால், அவருடைய வாதங்களையும் கேட்பதற்காக 19.11.2015ல் நடைப்பெற்ற கேட்புரையில் கலந்துகொள்ள அவருக்கு அறிவிப்பு கடிதம் கொடுக்கப்பட்டு அவரும் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

7. <u>மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி, தங்களுடைய மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளர் 5/44 என்ற எண் உள்ள வீடு அவருடைய தகப்பனார் திரு. ஹைதர்கான் சாயபு அவர்களுக்கு சொந்தம் என்றும், அதற்கு ஆதாரமாக 1988–89, 1990 – 91 ஆம் ஆண்டிற்கான வீட்டு வரி ரசீதுகளை சமர்பித்தார். ஆனால் தற்பொழுது வரியை பெற்றுக் கொள்ள ஊராட்சி மறுப்பதால், தற்பொழுதுள்ள வரி ரசீதுகளை சமர்பிக்க முடியவில்லை என்று தெரிவித்தார்.

7.3 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி தாங்கள், மின் இணைப்பு எண் 1336ஐ துண்டிப்பு செய்ய கோரவில்லை என்றும், அந்த மின் இணைப்பு தவறாக கதவு எண் 5/44–ல் வீட்டில் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அதனை, எந்த கதவு எண் உள்ள வீட்டிற்கு கொடுக்கப்பட்டதோ அந்த வீட்டிற்கு மாற்றி அமைக்க வேண்டும் என்றுதான் கோரப்படுகிறது என்றும் வாதிட்டார்.

7.4 மேலும், இப்பொழுது மின் இணைப்பு எண் 1336 கதவு எண் 5/44 என்ற வீட்டிலுள்ளது என்பதற்கு ஆதாரம் ஏதேனும் உண்டா என்ற கேள்விக்கு, தங்களுக்கு செப்டம்பர் மாதம் வரை, அவகாசம் அளித்தால், ஆதாரங்கள் பெற்று சமர்பிக்க முடியும் என்று தெரிவித்தார்.

7.5 மேலும், எதிர் மனுதாரரின் பதிலுரைக்கு, மேல்முறையீட்டாளரின் எதிர் உரையையும் (Rejoinder) சமர்ப்பித்தார். அந்த எதிர் உரையில் கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்.

i) அவர் எந்த நிலையிலும் மின் இணைப்பு எண் 1336–ஐ துண்டிக்கும் படி கோரவில்லை. 5/42 என்ற வீட்டிற்குண்டான வீட்டுவரி இரசீதின் அடிப்படையில் சரியான முறையில் கள ஆய்வு செய்யாமலோஅல்லது வேண்டுமென்றே வேறு ஏதேனும் காரணத்தாலோ 5/44 என்ற அவரது வீட்டில் கொடுக்கப்பட்டுள்ள மேற்படி மின் இணைப்பை முழுமையாக அகற்றி, உரிய கதவு எண்ணில் வாரிய விதிமுறைகளின்படி பொருத்திக் கொடுக்கும்படி தான் முறையீடு செய்துள்ளார்.

ii) வாரிய விதிகளின்படி வீட்டு மின் இணைப்பிற்கு தேவையான ஆவணங்களும் மற்றும் குறைதீர்க்கும் மன்றம், திண்டுக்கல் மின் பகிர்மான வட்டத்தில் சேகரித்த ஆவணங்களும் சமர்பிக்கப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் திரு.M. அரப்ஷா அவர்களுக்கு 28.10.2008–ல் தவறான வீட்டுவரி ரசீது அடிப்படையில் ஏதோ ஒரு உள்நோக்கத்தோடு, அன்னாருக்கு உதவி செய்யும் நோக்கில் சரியாக கள ஆய்வு செய்யாமலோ அல்லது தெரிந்தோ கொடுத்துவிட்டு, 5/44 என்ற வீட்டின் உண்மையான உரிமையாளரை பலவாறு வேண்டுமென்றே, தாங்கள் செய்த தவறுகளை மறைக்கும் நோக்கில் செயல்படுவது தெளிவாகிறது.

iii) எதிர் மனுதாரர் புகைபடம் எடுத்து மேற்படி மின் இணைப்பு கொடுத்த வீடு 5/42 தான் என்றும் தெளிவு படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார் மற்றும் ஒரு மின் இணைப்பு எண் 105 இருந்த வீடு 5/44 என்றும் தெரிவித்துள்ளார்.

iv) தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் வீடு / கடைகளுக்கு மின் இணைப்பு வழங்கும் பொழுது அந்த கட்டிடத்தின் முகப்பில் உள்ளாட்சி துறையினரால் எழுதப்பட்டிருக்கும் கதவு எண்ணை புகைப்படம் எடுக்கும் பழக்கம் இருப்பதாக தெரியவில்லை. மேலும் உள்ளாட்சி துறையினர் கதவு எண்களை முகப்பு கதவில் எழுதிதான் செல்வர். தனியாக தகட்டில் எழுதி ஒவ்வொரு வீட்டிற்கும் பொருத்துவது இல்லை. இந்த புகைப்படங்கள் இப்பிரச்சனை வந்த பின்பு செய்யப்பட்ட ஜோடனையாக உள்ளது என குறைதீர்க்கும் மன்றத்திலேயே தெரிவித்துள்ளார்.

v) தற்பொழுது உள்ள அடிப்படை பிரச்சனை எதிர்மனுதாரர் கொடுத்துள்ள மின் இணைப்பு எண் 1336, கதவு எண் 5/44–ல் பொருத்தப்பட்டுள்ளதா அல்லது 5/42–ல் பொருத்தப்பட்டுள்ளதா என்பதாகும். மதிப்பிற்குரிய தமிழ்நாடு மின்சார குறை தீர்ப்பாளர், சென்னை அவர்கள் ஓர் பொதுவான நபரை நியமித்து இந்த விவரத்தை, நேரில் ஆய்வு செய்து அறிக்கை பெற்று தெரிந்து கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

vi) எதிர்மனுதாரர் மேற்படி மின் இணைப்பு தவறுதலாக கொடுக்கப்பட்டிருக்கிறது என தெளிவாக தெரிந்தும், தமிழ்நாடு மின்பகிர்மான கழகம் பலமுறை கோரியும் திரு. A. ஷேக் அப்துல்லா எந்தவொரு ஆவணத்தையும் சமர்பிக்கவில்லை என்ற நிலையிலும், தங்களது தவறான செயல்பாட்டை மூடி மறைக்கும் வகையில் அவருக்கு தகுதியில்லையென தெரிவித்துள்ளார்.

vii) அவரது புகார் 5/44 என்ற எண்ணுள்ள அவரது வீட்டிற்கு, 5/42 என்ற வீட்டு வரி ரசீதின் அடிப்படையில் மேற்படி மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்பதே ஆகும்.

இச்சூழ்நிலையில் உள்ளாட்சி துறையின் 5/42 என்ற வீட்டிற்கு 2014–15 வரி விதித்துள்ளனர் என கூறுவது எதற்கு என்று புரியவில்லை.

viii) எதிர் மனுதாரர் கூறுவது போல் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் எந்தவொரு தவறான ஆவணங்களின் அடிப்படையில், எந்தவொரு கட்டிடத்திற்கும் மின் இணைப்பை கொடுத்து தவறானவர்கள் தங்களுக்கு உண்மையல்லாத கட்டிடத்தை சட்டத்திற்கு அப்பாற்பட்டு ஆக்கிரமிப்பதற்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்துவிட்டு, பின்பு உண்மையான உரிமையாளர் தவறுகள் தெரிந்து முறையீட்டில் தாங்கள் தெரிந்தோ, அல்லது தெரியாமலோ செய்த தவறுகளை மறைப்பதற்கும் தங்களது அதிகாரிகள் / பணியாளர்கள் செய்த தவறுகளிலிருந்து அவர்களை காப்பதற்கும் மனித உரிமை மீறல்கள் என கூறுவது சரியானதா என்பதை மதிப்பிற்குரிய தமிழ்நாடு மின்சார குறைதீர்ப்பாளர் அவர்கள் பரிசீலிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

## 8. <u>எதிர்மனுதாரர் (3) கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 திரு. K. தங்கராஜ் உதவி பொறியாளர் / கிழக்கு, சத்திரப்பட்டி இந்த வழக்கின் எதிர்மனுதாரர் (3) அவர்கள் கலந்து கொண்டு தங்களது தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார். அவர் தங்களது பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 உதவி பொறியாளர் / கிழக்கு சத்திரப்பட்டி அவர்கள், மின் இணைப்பு எண். 1336 கொடுக்கப்பட்டுள்ள வீட்டின் நுழைவு வாயிற் கதவில் இரும்பு தகட்டில் 5/42 என்ற எண் குறிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, பஞ்சாயத்திடமிருந்து பெற்ற வரி ரசீதில் உள்ள வீட்டு நம்பரும், கதவிலுள்ள எண்ணும் சரியாக உள்ளது என்றும் எனவே, மின் இணைப்பு வழங்கப்பட்ட இடம் கதவு எண் 5/42 என்ற வீடுதான் என்று வாதிட்டார். அதற்கு சான்றாக போட்டோ நகலையும் அளித்தார்.

8.3 மேலும் மேல்முறையீட்டாளர், மேற்கண்ட மின் இணைப்பு கொடுக்கப்பட்ட வீடு கதவு எண் 5/44 என்பதற்கான ஆதாரம் எதையும் சமர்பிக்கவில்லை என்றும் வாதிட்டார்.

8.4 மேலும், கதவு எண் 5/44 ல் உள்ள வீடு, அவருக்கோ, அல்லது அவரின் தகப்பனார் பெயரிலோ உள்ளது என்பதற்கான அந்த வருவாய் பிரிவு வட்டாட்சியர் அலுவலரின் சான்று எதுவும் சமர்ப்பிக்கவில்லை என்றும் வாதிட்டார்.

8.5 திரு. அரப்ஷா பெயரில் நடப்பு நிதியாண்டு 2015 – 2016 வரை கதவு எண்.5/42–ல் உள்ள வீட்டிற்கு வீட்டு வரி வசூல் செய்யப்பட்டுள்ளது என்று சத்திரப்பட்டி பஞ்சாயத்து தலைவர் அளித்துள்ள சான்றின் நகலையும் அளித்துள்ளார்.

8.6 மேலும், கதவு எண் 5/44 உள்ள வீட்டில் தான், மின் இணைப்பு எண் 105 இருந்து துண்டிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த வீட்டில் கதவு எண் 5/44 என்று எழுதப்பட்டுள்ள கதவு இன்றும் உள்ளது என்றும் தெரிவித்தார்.

8.7 மேலும், ஒரு வீட்டின் உரிமையாளர் மற்றும் குடியிருப்பவரும் மின் இணைப்பை பெறலாம் என்று மின்சார சட்டம் 2003 தெரிவிக்கின்றது என்றும், மின்சாரம் அத்தியாவசியமான ஒன்று என்றும், அதை பெறுவது அடிப்படை உரிமை என்பதாலும், ஒரு குடும்பம் குடியிருக்கும் வீட்டின் மின் இணைப்பை, மின் கட்டணம் சரியாக செலுத்தும் பொழுது, மற்றும், மின் துண்டிப்பு செய்யலாம் என்ற விதிகளில் கூறப்பட்டுள்ள காரணங்களை தவிர்த்து மின் இணைப்பை துண்டிக்க விதிகளில் வழியில்லை என்றும் வாதிட்டார்.

8.8 மேலும், இந்த வீட்டின் உரிமைப் பிரச்சனையை மேல்முறையீட்டாளர் தக்க நீதிமன்றத்தில் முறையிட்டு தகுந்த ஆணையை பெற்று தீர்த்து கொள்ள வேண்டும் என்றும், வாதிட்டார்.

**9. <u>திரு. A. ஷேக் அப்துல்லா, த/பெ லேட் அரப்ஷா அவர்கள் கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள்:</u>**

9.1 திரு. A. ஷேக் அப்துல்லா, த/பெ அராப்ஷா அவர்கள் மேற்கண்ட மின் இணைப்பு எண் 1336, வீட்டு கதவு எண் 5/42 என்ற வீட்டில்தான் அவரின் தந்தையார் திரு அராப்ஷாவால் பெறப்பட்டுள்ளது என்று வாதிட்டார்

9.2 மேலும், கதவு எண் 5/44 என்ற வீடு தற்பொழுது திரு. A. முஜிபுர் ரஹமான் அவர்களுக்கு சொந்தமானது என்றும் மேற்கண்ட வீடு திரு. முஜிபுர் ரஹமான் அவர்கள்

விலைக்கு வாங்குவதற்கு முன்பாக திரு. N. மதார்சாயபு மகன், M. காதர் பாட்சாவிற்கு சொந்தமானது என்றும் தெரிவித்தார்

9.3 திரு. A. ஷேக் அப்துல்லா அவர்கள், திரு ஹைதர்கான் அவர்கள் கதவு இலக்க எண் 5/42–ல் உள்ள வீட்டை அவரின் தந்தைக்கு விற்று உள்ளதாகவும், அதற்கு முன்பணம் பெற்றுக் கொண்டு வீட்டில் குடியிருக்க தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொள்ளும்படி தெரிவித்து (குடிதண்ணீர் மற்றும் மின்சார வசதிகளை அதற்கான பஞ்சாயத்தில் சமர்பிக்க வேண்டிய அனுமதி கடிதத்தையும் கொடுத்துள்ளார் என்ற தகவலை தெரிவித்து) அதற்கு ஆதாரமாக சத்திரப்பட்டி பள்ளிவாசல், முத்தவல்லி அவர்களின் கடிதத்தையும் சமர்பித்தார்.

9.4 மேலும், கீழ்கண்ட அவருடைய எழுத்து பூர்வமான வாதுரையை அவரின் 29.11.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

(i) எதிர் மனுதாரர் H. தாவூத்கான் S/o க. ஹைதர்கான் தங்களுக்கு சொந்தமான முகவரி எனக் குறிப்பிடும் கதவு எண் 5/44 தெற்குத்தெரு, சத்திரப்பட்டி என்பது அரசு ஆவணங்களின் படி (வீட்டுப் பத்திரம் பட்டா, வீட்டுவரி ரசீது, தண்ணீர் இணைப்பு, உண்மை நகல் இணைக்கப்பட்டுள்ளது). N. மதார்சாயபு மகன் M.காதர்பாட்சாவிற்கு சொந்தமானது. இதற்கு ஆதரவாக 2003 முதல் 2013 வரை M. காதர்பாட்சா பெயரில் பெறப்பட்ட பட்டா மற்றும் வீட்டுவரி ரசீது உண்மை நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(ii) மேலும் இந்த வீட்டை 2013–ல் கிரையம் பெற்ற A. முஜிபுர் ரஹ்மான் அவர்கள் பெயரில் உள்ள 5/44 முகவரி கொண்ட பத்திரம், வீட்டுவரி ரசீது போன்றவை நடப்பாண்டு (2015) வரை தங்கள் மேலான பார்வைக்கு உண்மை நகல் வைக்கப்பட்டுள்ளது.

(iii) எனவே எதிர்மனுதாரர் குறிப்பிடுவது போல் கதவு எண் 5/44 என்ற முகவரி லேட் ஹைதர்கான் பெயரில் இல்லை என்பது ஊர்ஜிதமாகிறது. எனவே மேற்குறிப்பிட்ட முகவரி தங்களது என்ற எதிர் மனுதாரரின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது ஆகும்.

(iv) தற்போது எதிர்மனுதாரர் மின் இணைப்பு எண் 1336 அமைந்துள்ளதாக குறிப்பிடும் வீடு தனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்று கூறி சில ஆவணங்களை சமர்ப்பித்து அதன் நிமித்தம் மின் இணைப்பை இடமாற்றம் செய்ய கோரியுள்ளார். அவ்வாறு கோருவாரேயானால் அவரோ அல்லது அவருடன் பிறந்த வாரிசுகளோ தான் உண்மையான உரிமையாளர் என்பதை வட்டாட்சியர் அலுவலகம் மூலம் பெறப்பட்ட சமீபத்திய ஆவணங்களையோ அல்லது சத்திரப்பட்டி பஞ்சாயத்து மூலம் பெறப்பட்ட சமீபத்திய வீட்டுவரி ரசீது, குடிநீர் ரசீது போன்ற ஆவணங்களையோ கொண்டு அதனை நிரூபணம் செய்வதற்கு அவர் தவறியதிலிருந்தே அன்னாரது கோரிக்கையில் உண்மை எதுவும் இல்லை என்ற விவரம் தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

(v) மேலும் தற்போது மின் இணைப்பு எண் 1336 பெறுவதற்கு மின்சார வாரியத்தில் செலுத்திய கதவு எண் 5/42 என்ற முகவரி M. அரப்ஷா அவர்கள் பெயரில் வீட்டுவரி ரசீது கொடுத்து முறையாக பெறப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக 2002 முதல் நடப்பாண்டு (2015) வரை M. அரப்ஷா அவர்கள் பெயரில் பெறப்பட்ட வீட்டுவரி ரசீது உண்மை நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(vi) மேற்கண்ட முகவரி உள்ள வீட்டிற்கு கடந்த 1990 ஆம் வருடத்திய குடிநீர் கட்டண ரசீதில் குடிநீர் இணைப்பு எண் 402 என்று ஒதுக்கீடு செய்து பெறப்பட்டுள்ளது. (ஆவண நகல் இணைக்கப்பட்டுள்ளது) மேற்படி குடிநீர் இணைப்பு எண் 402 நடப்பு காலம் வரை மேற்குறிப்பிட்ட கதவு எண் 5/42 நாங்கள் குடியிருந்து வரும் அதே வீட்டில்தான் இருந்து வருகிறது என்பதற்கு சமீபத்தில் பஞ்சாயத்தில் இருந்து பெறப்பட்ட குடிநீர் கட்டண ரசீது உண்மை நகல் இத்துடன் இணைத்து தங்களின் மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

(vii) இதன் மூலம் கதவு எண் 5/44, தெற்குத்தெரு, சத்திரப்பட்டி என்ற முகவரி தற்போது A. முஜிபுர் ரஹ்மான் அவர்களுக்கு சொந்தமான முகவரி என்றும் மேலும் கதவு எண் 5/42,

தெற்குத்தெரு, சத்திரப்பட்டி என்ற முகவரி M. அரப்ஷா அவர்களுக்கு சொந்தமான முகவரி என்றும் கடந்த 15 வருட அரசின் ஆவணங்கள் மூலம் நிரூபித்துள்ளோம். எனவே M. அரப்ஷா அவர்கள் பெயரில்தான் 5/42 என்ற கதவிலக்க எண் கொண்ட சரியான முகவரி மற்றும் ஆவணத்தை சமர்ப்பித்தே மின் இணைப்பு எண் 1336 பெறப்பட்டுள்ளது. எனவே எதிர் மனுதாரர் M. அரப்ஷா அவர்களின் வாரிசான தற்போது மேற்படி வீட்டில் குடும்பத்துடன் குடியிருந்து வரும் அவரை அலைக்கழிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் புகார் மனு கொடுத்துள்ளார்.

(viii) தற்போது மின் இணைப்பு (SC.No.1336) பெறப்பட்ட வீடான கதவு எண் 5/42 தெற்குத்தெரு, சத்திரப்பட்டி என்ற முகவரியில் தான் லேட் M. அரப்ஷா குடும்பத்தாராகிய நாங்கள் கடந்த 1980 முதல் 35 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறோம் என்பதற்கான சத்திரப்பட்டி பள்ளிவாசல் ஜமாத் கமிட்டி கொடுத்த உண்மை சான்றிதழையும் இத்துடன் இணைத்துள்ளோம்.

(ix) எதிர் மனுதாரர் மின் இணைப்பு எண் 1336ஐ இடமாற்றம் செய்யக்கோருவதன் மூலம் மேற்படி மின் இணைப்பு அமைந்துள்ள வீடு தமது சொத்து எனக் கருதி அதனை தக்கவைத்துக்கொள்ளும் பொருட்டில் உள்நோக்கத்துடன் மேல்முறையீடு மனு செய்துள்ளார். அவ்வாறு மேற்படி வீட்டின் சொத்து உரிமையை அன்னார் தக்கவைக்க வேண்டுமெனில் அவர் தகுதி வாய்ந்த உரிமையியல் நீதிமன்றத்தினைத்தான் அணுகியிருக்க வேண்டும். மாறாக மின்வாரியத்தால் முறையாக எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை ஜீவாதார உரிமையான மின் இணைப்பினை மேற்படி வீட்டில் மனைவி மற்றும் குழந்தைகளுடன் கடந்த 35 வருடங்களாக குடியிருந்து வரும் எனது குடும்பத்தாருக்கு கிடைக்கவிடாமல் செய்து விடலாம் என்று எதிர் மனுதாரர் கருதினால் அதனை தாங்கள் கண்டிப்பாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

10. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

10.1 மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர் மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள், தற்பொழுது மின் இணைப்பு எண் 1336 ஐ உபயோகித்து வரும், திரு. A. ஷேக் அப்துல்லா அவர்களின் வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட தீர்வு வழங்கப்படுகிறது.

10.2 மேல்முறையீட்டாளர் கதவு எண் 5/44 இல் உள்ள வீடு அவரின் தகப்பனார் ஹைதர்கான் சாயபு அவர்களுக்கு சொந்தமானது என்று தெரிவித்து அதற்கு ஆதாரமாக அவரின் தந்தைக்கு மேற்கண்ட சொத்து சொந்தமான பாகப்பிரிவினை பத்திரத்தின் நகல் மற்றும், 1988–89, 1990–91 ஆம் ஆண்டிற்கான வீட்டுவரி ரசீதுகளையும் சமர்பித்துள்ளார். மேலும் மேற்கண்ட கதவு இலக்க எண் உள்ள வீட்டில் கதவு இலக்க எண் 5/42 என்ற வீட்டின் ஆவணங்களை பெற்றுக் கொண்டு, தவறாக மின் இணைப்பு எண் 1336 திரு அரப்ஷா என்ற பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்று வாதிட்டுள்ளார்.

10.3 எனவே மேற்கண்ட மின் இணைப்பு எண் 1336 ஐ கதவு எண் 5/44 உள்ள வீட்டில் அந்த மின் இணைப்பை கொடுத்தது மின் வாரிய அலுவலகங்களின் தவறு என்றும் வாதிட்டார். எனவே, தவறாக கொடுக்கப்பட்ட மின் இணைப்பை ஆவணங்களின்படி அந்த மின் இணைப்பு எந்த வீட்டிற்கு கொடுக்கப்பட வேண்டுமோ அந்த வீட்டிற்கு மாற்றி அமைக்க வேண்டும் என்றும் கோரினார்.

10.4 எதிர்மனுதாரர், மின் இணைப்பு எண் 1336 திரு. M. அரப்ஷா, த/பெ மதர்சாயபு என்பவர் பெயரில் கதவு இலக்க எண் 5/42 என்ற வீட்டில் 28.10.2008 அன்று வழங்கப்பட்டுள்ளது என்றும் வீட்டு மின் இணைப்பு வழங்கும் பொழுது வீட்டின் வரி ரசீது பெறப்பட்டுதான் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்று அதற்காக நகல்களையும் அளித்துள்ளார்.

10.5 எதிர்மனுதாரர், மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள வீட்டிலுள்ள நுழைவாயில் கதவில் இரும்பு தகட்டில் 5/42 என்ற நம்பர் குறிக்கப்பட்டுள்ளது எனவே, பஞ்சாயத்து அளித்த வீட்டுவரி

ரசீதில் உள்ள கதவு என்றும், வீட்டின் கதவிலுள்ள எண் இரண்டும் ஒன்றாக உள்ளதால், மின் இணைப்பு சரியாகத்தான் வழங்கப்பட்டுள்ளது என்று வாதிட்டுள்ளார்.

10.6 மேலும் மேல்முறையீட்டாளரும் கதவு எண் 5/44 அவருக்கோ அவருடைய தகப்பனாரின் பெயரிலுள்ளது என்பதற்கான தற்போதைய வரி ரசீது எதையும் அல்லது சம்பந்தப்பட்ட வருவாய்துறை வட்டாட்சியரின் சான்று எதையும் அளிக்கவில்லை என்று வாதிட்டுள்ளார். மேலும் 5/44 கதவிலக்கம் உள்ள வீட்டிற்கான வரி ரசீது தற்பொழுது A. முஜிபுர் ரஹ்மான் என்ற பெயரிலுள்ளது என்று தெரிவித்து அதற்கு ஆதாரமாக வரி ரசீது எண். 0729, நாள் 8.9.2014 நகலையும் அளித்துள்ளார்.

10.7 கதவு எண் 5/44 உள்ள வீட்டிலிருந்து தான் மின் இணைப்பு எண் 105 துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த வீட்டில் கதவிலக்க எண் 5/44 என்ற எழுதப்பட்டுள்ள கதவு இப்பொழுதும் உள்ளது என்றும் எனவே மேல் முறையீட்டாளரின் வாதமான மின் இணைப்பு எண் 1336 தவறுதலாக 5/44 என்ற கதவிலக்கம் உள்ள வீட்டில் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் வாதுரை புரிந்தார்.

10.8 மின் இணைப்பு 1366 கொடுக்கப்பட்டுள்ள வீட்டில் ஒரு குடும்பம் வசிப்பதாகவும், அந்த மின் இணைப்பின் மின்கட்டணம் சரியாக செலுத்தப்பட்டு வருவதால் மின் இணைப்பை துண்டிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

10.9 மேற்கண்ட மின் இணைப்பு எண் 1336 உள்ள வீட்டில் குடியிருக்கும் திரு.A.ஷேக் அப்துல்லா என்பவர் மின் இணைப்பு பெற்றுள்ள வீட்டின் கதவு எண் 5/42 என்றும், மேற்கண்ட மின் இணைப்பு தன்னுடைய தந்தையின் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றும் வாதுரை புரிந்தார்.

10.10 மேலும், திரு ஷேக் அப்துல்லா அவர்கள் மேற்கண்ட வீட்டில் அவர்களின் குடும்பம் குடியிருந்து வருவதாகவும் கடந்த 2000–2001 முதல் 15 வருடங்களாக மேற்கண்ட வீட்டிற்கு வீட்டு வரி கட்டி வருவதாகவும் தெரிவித்து சில வீட்டுவரி ரசீதுகளின் நகலையும் சமர்பித்துள்ளார்.

10.11 மேலும் அவர் 5/44 என்ற கதவிலக்க எண் கொண்ட வீடு திரு. N. மதர் சாயபு மகன் திரு M. காதர்பாட்சாவுக்கு சொந்தமானது என்றும் திரு ஹைதர்கான் என்பவர் பெயரில் இல்லை என்றும் தெரிவித்து அதற்கு ஆதாரமாக 2003 முதல் 2013 வரை M. காதர்பாட்சா பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது மற்றும் பட்டா நகல்களையும் சமர்பித்துள்ளார். மேலும் தற்பொழுது அந்த வீடு திரு.A. முஜிபுர் ரஹ்மான் என்பவர் வாங்கியுள்ளார் என்றும் தெரிவித்து அந்த விற்பனை பத்திரத்தின் நகல், மற்றும் முஜிபுர் ரஹ்மான் பெயரிலுள்ள பத்திரம் வீட்டுவரி ரசீது நகல்களையும் சமர்பித்துள்ளார்.

10.12 5/44 எண் உள்ள வீட்டின் உரிமையாளா சம்பந்தமாக தீர்வு வழங்குவதற்கு தகுதி வாய்ந்த உரிமையியல் நீதிமன்றத்திற்குதான் அதிகாரம் உண்டு. மின்குறைதீர்ப்பாளருக்கு அந்த அதிகாரம் இல்லை.

10.13 மேற்கண்ட வாதங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது நாம் அறிவது, இந்த வழக்கில் உள்ள வழக்கெழு வினா, மின் இணைப்பு எண் 1336 திரு அரப்ஷா என்பவர் பெயரிலுள்ள 5/42 கதவிலக்க எண் உடைய வீட்டின் வரி ரசீதின்படி கதவு இலக்கம் 5/42 என்ற வீட்டிற்குதான் கொடுக்கப்பட்டுள்ளது என்ற எதிர்மனுதாரரின் வாதம் சரியானதா ? என்பது ஆகும்.

10.14 இந்த வழக்கின் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு எண் 1336 கதவு இலக்கம் 5/42 என்ற வீட்டிற்கான ஆவணங்கள் பெறப்பட்டு தவறாக கதவு இலக்கம் 5/44 என்ற அவருடைய தகப்பனார் பெயரிலுள்ள வீட்டில் கொடுக்கப்பட்டுள்ளது என்று வாதிட்டுள்ளார் அதற்கு ஆதாரமாக அவரின் தகப்பனார் பெயரிலுள்ள 1988–89 ஆம் வருட வீட்டுவரி ரசீது எண் 52303 மற்றும் 1990–91 ஆம் வருட வீட்டு வரி ரசீது எண் 052508 ஆகியவற்றையும் அளித்துள்ளார். ஆனால் தற்போதைய வரி ரசீதுகள் எதையும் சமர்பிக்கவில்லை. அவரிடம் அவையில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், அவரின் தந்தையாருக்கும் தந்தையார் சகோதரருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பாக உடன்படிக்கையின் நகலையும் மேற்கண்ட வீடு அவரின் தந்தைக்கு சொந்தம் என்பதற்கு ஆதாரமாக இணைத்துள்ளார்.

10.15 1988–89 & 1990 – 91 ஆகிய இரு வீட்டு வரி ரசீதுகளின் நகல்களையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது திரு. ஹைதர்கான் சத்திரப்பட்டி என்ற பெயரில் கதவு இலக்க எண் 5/44 என்ற வளாகத்திற்கு வழங்கப்பட்டுள்ள ரசீதுகள் என்று அறியப்படுகிறது.

10.16 1970–ம் வருடம், நவம்பர் 16–ம் தேதியிடப்பட்ட பாகவிஸ்திப் பத்திரத்தின் (பாகபிரிவினை) A. ஷெட்யூல்படி, திரு. ஹைதர்கான் சாயபு அடைய கூடிய சொத்து விவரம், மேற்கண்ட பத்திரத்திலுள்ளபடி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*A.ஷெடியூல்*

*1 லக்கமிட்ட ஹைதர்கான் சாயபு அடையக் கூடிய சொத்துக்கள் விவரம்.*

*திண்டுக்கல் டி சத்திரப்படடி சப்டி சத்திரப்பட்டி கி கஸ் பா ஊர் கட்டில் 5 வது வார்டு 343 கதவு எண் உள்ள சிகஸ்த்துமனையிற்குமால் : பழனிச்சாமி என்ற பொன்னுச்சாமித் தேவர் வீட்டுக்கும் (வ) மதார் சாயபு வ வீட்டுக்கும் (மே) B ஷெடியூல் 2 லக்க நபர்பாக வீட்டுக்கும் இடத்துக்கும் (தெ) தென்வடபாதைக்கும் (கி) இதற்குள் கிழ மேல் ஜாதியடி 47 நாற்பத்தி ஏழு தென்வடல் ஜாதியடி 29 இருபத்தி ஒன்பது உள்ள இடமும் ஷெமாலுக்குள் மேல்புரம் சிகஸ்த்து மண்சுவர் வடக்குப்பார்த்த நாட்டு ஓடு வீடும் அதன் கதவு நிலை கட்டுக் கோப்பு சாமான்களும் மேற்கு முகமாக நடைபாதை பாத்தியமும் வாசலிடமும் சேர்த்து மதிப்பு*

| | |
|---|---|
| | *500.00* |
| *A ஷெட்யூல் மதிப்பு* | *500.00* |

10.17 மேற்கண்ட பத்திரத்தின்படி திரு ஹைதர்கான் அவர்களின் வீட்டு நம்பர் 5 வது வார்டு, கதவு எண் 343 ஆகும். ஆனால் மேற்கண்ட பத்திரப்பதிவு செய்யப்பட்ட நாள் 16.11.1970 ஆகும்.

10.18 திரு. ஷேக் அப்துல்லா அவர்கள் கதவு எண் 5/44, தெற்குத் தெரு, சத்திரப்பட்டி என்பது திரு.N. மாதர் சாயபு அவர்களின் மகன் திரு.M. காதர் பாட்சாவிற்கு சொந்தம் என்று தெரிவித்து அதற்கு ஆதாரமாக 2003 முதல் 2013 வரை பெறப்பட்ட வீட்டு வரி ரசீதுகளின் நகல்களை சமர்பித்துள்ளார். மேலும், பட்டாவும் திரு காதர் பாட்சா பெயரில் உள்ளது என்ற பட்டாவின் நகலையும் அளித்துள்ளார். மேலும் மேற்கண்ட கதவு எண் 5/44 என்ற வீட்டை திரு. A. முஜிபுர் ரஹ்மான் அவர்கள் 2013ல் கிரையம் பெற்றுள்ளார் என்றும், தற்பொழுது திரு. முஜிபுர்

ரஹ்மான் பெயரிலுள்ள வீட்டுவரி ரசீது, விற்பனை பத்திரத்தின் நகல்கலையும் சமர்ப்பித்துள்ளார்.

**10.19** அவர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது கீழ்கண்டவைகளை அறிய முடிகிறது. அவர் அனுப்பியுள்ள வீட்டு வரி ரசீதுகளின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| எண் | வரி விதிப்பு எண் | கதவு இலக்கம் | ரசீது எண் மற்றும் நாள் | வரி விதிப்பு காலம் | வரி விதிக்கப்பட்டவரின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | 698 | 5/44 | 007908/9.3.04 | 2003–04 | M. காதர்பாட்சா |
| 2 | 719 | 5/44 | 16700/26.3.09 | 2008–09 | M. காதர்பாட்சா |
| 3 | 719 | 5/44 | 0692/8.3.13 | 2012–13 | M. காதர்பாட்சா |
| 4 | 719 | 5/44 | 0729/8.9.14 | 2014–15 | A. முஜிபுர் ரஹ்மான் |

**10.20** மேற்கண்ட விபரங்களின்படி கதவு இலக்க எண் **5/44** என்ற வீடு, M. காதர்பாட்சா என்பவர் பெயரில் **2003–2004, 2008–09** மற்றும் **2012–13** வரை வரி செலுத்தப்பட்டுள்ளது என்றும் **2014–15** ஆண்டு அது திரு.A. முஜிபுர் ரஹ்மான் என்பவர் பெயரில் வரி செலுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிகிறது. மேலும், **5/2009** முதல் **8/2014** காலங்களுக்கான குடிநீர் கட்டணமும் திரு. முஜிபுர் ரஹ்மான் அவர்களின் பெயரில் ரசீது எண்.**04033** நாள் **8.9.2014**–ன் படி கட்டப்பட்டுள்ளது.

**10.21** மேலும், அவர் அனுப்பியுள்ள விற்பனை பத்திரத்தில், திரு. A. முஜிபுர் ரஹ்மான் அவர்கள் மேற்கண்ட வீட்டை திரு. காதர் பாட்சாவான வாரிசுகளிடமிருந்து விலைக்கு வாங்கியதாக தெரிகிறது. மேற்கண்ட விற்பனை பத்திரத்திலுள்ள சொத்து விபரம் அதிலுள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"__கிரைய சொத்துவிபரம்__*

*பழனி பதிவு மாவட்டம், சத்திரப்பட்டி சார்பதிவகம், ஒட்டன்சத்திரம் வட்டம், சத்திரப்பட்டி கிராமம், நத்தம் சர்வே எண் 285, (நத்தம் நிலவரித்திட்ட கணக்கின்படி பட்டா எண் 191, சர்வே எண் 424/42) கதவு எண் 5/44 உள்ள வீட்டுக்கு மால்விபரம் :-*

*கிழமேல் பாதைக்கும் (தெற்கு),*

*கர்ணன், சேகர் இவர்கள் வீட்டுக்கும் (வடக்கு),*

*மதி, முஜிபுர் ரஹ்மான், சேகர் இவர்கள் வீட்டுக்கும் (மேற்கு),*

*சையதுஜாபர், அரப்ஷா பராமரிப்பில் உள்ள வீட்டுக்கும் (கிழக்கு),*

*இதற்குள் 135 சதுசர மீட்டர் அளவுள்ள இடமும்*

*இதில் வடபுறம் கிழமேல் அடி 21, தென்வடல் அடி 16 ஆக 336 சதுரடிக்கு 31.2 சதுர மீட்டர் அளவில் மண்தரை, மண்சுவர் பலஜாதி மரங்களைக்கொண்டு நாட்டோடு போட்டு சுமார் 70 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டுள்ள வீடும், இதன் கதவு நிலவு ஜன்னல் விட்டம் பிறவிடையும், மேற்படி வீட்டில் உள்ள மின் இணைப்பு எண் 105 உள்படவும்.*

*மேற்படி மாலுக்குள் மேற்படி வீட்டை ஒட்டி தென்புறம் கிழமேல் அடி 11, தென்வடல் அடி 16 ஆக 176 சதுரடிக்கு 16.4 சதுர மீட்டர் அளவில் மண்தரை மண்சுவர் பலஜாதி மரங்களை கொண்டு மங்களூர் ஓடு போட்டு சுமார் 40 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட வீடும் இதன் கதவு நிலவு ஜன்னல் விட்டம், பிறவிடையும் மேற்படி வீட்டில் மின் இணைப்பு இல்லை, மேற்படி வீட்டை ஒட்டி தென்புறம் கிழமேல் அடி 4 1/2 தென்வடல் அடி 3 1/2 ஆக16 சதுரடிக்கு 1.49 சதுர மீட்டர் அளவில் கட்டப்பட்டுள்ள பாத்ரூம் உள்படவும், மாமூல் பாதை பாத்தியமும்.”*

10.22 மேற்கண்ட விபரத்தின்படி வீட்டின் கதவு எண் 5/44 என்பதும் சர்வே எண் 424/42 என்றும் அறிய முடிகிறது. மேலும் அந்த வீட்டிலுள்ள மின் இணைப்பு எண் 105 என்றும் தெரிகிறது (மேற்கண்ட மின் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டுவிட்டது) மின் இணைப்பு எண் 105 திரு. மதார் சாயபு என்பவர் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது. மதர் சாயபுவின் மகன் காதர்பாட்சாவின் வாரிசுகளிடமிருந்து முஜிபுர் ரஹ்மான் அதை விலைக்கு வாங்கியுள்ளார். எனவே மின்இணைப்பு எண் 105 இருந்த வீட்டின் கதவு எண் 5/44 ஆகும்.

10.23 மேற்கண்ட ஆவணங்களின்படி 5/44 என்ற கதவிலக்கம் கொண்ட வீட்டிற்கு 2003 –04 லிருந்து 8.3.2013 வரை காதர்பாட்சா என்ற பெயரில் வரி விதிப்பு நடந்துள்ளது என்றும் அதன்பிறகு திரு.A. முஜிபுர் ரஹ்மான் பெயரில் வரி விதிப்பு உள்ளது என்றும் தெளிவாகிறது.

10.24 மேலும், திரு. A. ஷேக் அப்துல்லா அவர்கள் கதவிலக்கம் 5/42 என்ற வீடு கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக திரு. M. அரப்ஷா என்ற பெயரில்தான் வரிவிதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து அதற்கான ஆதாரமாக கீழ்கண்ட வீட்டு வரி ரசீதுகளை சமர்பித்துள்ளார்.

| எண் | வரிவிதிப்பு எண் | கதவு இலக்கம் | ரசீது எண் மற்றும் நாள் | வரி விதிப்பு காலம் | வரி விதிக்கப்பட்டவரின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | 728 | 5/42 | 666/13.3.2001 | 2000–2001 | அரப்ஷா |
| 2 | 728 | 5/42 | 037719/11.3.03 | 2002–2003 | அரப்ஷா |
| 3 | 695 | 5/42 | 038500/10.9.03 | 2003–2004 | அரப்ஷா |
| 4 | 695 | 5/42 | 007558/27.5.04 | 2004–2005 | அரப்ஷா |
| 5 | 216 | 5/42 | 003136/13.2.2007 | 2006–2007 | அரப்ஷா |
| 6 | 716 | 5/42 | 9928/9.2.2010 | – | அரப்ஷா |
| 7 | 716 | 5/42 | 00379/31.1.2011 | 2010–2011 | அரப்ஷா |
| 8 | 716 | 5/42 | 2018/11.2.2014 | 2013–2014 | அரப்ஷா |
| 9 | 716 | 5/42 | 0855/2.12.2014 | 2014–2015 | அரப்ஷா |
| 10 | 859 | 5/42 | 3295/18.11.2015 | 2015–2016 | அரப்ஷா |

10.25 மேலும் குடிநீர் வரி ரசீதும் இணைக்கப்பட்டுள்ளது அவற்றில் 04/2015 to 3/2016 வரையிலான காலத்திற்கு உள்ள ரசீது எண் 5097 நாள் 23.11.15ல் மட்டும் கதவு எண் 5/42 என்று போடப்பட்டுள்ளது. மற்ற ரசீதுகளில் கதவு இலக்கம் இல்லை ஆனால், SC No.402 என்று போடப்பட்டுள்ளது. அது கீழ்கண்ட காலங்களுக்கு உள்ளது.

(i) 11/03 to 11/04

(ii) 12/04 to 11/07

(iii) 12/07 to 11/09

(iv) 12/09 to 8/12

10.26 மேற்கண்ட ஆவணங்களின்படி, கதவு இலக்கம் எண்.5/42 என்ற வீட்டிற்கு வீட்டு வரி ரசீது திரு. அரப்ஷா, சத்திரப்பட்டி அவர்களின் பெயரில் உள்ளது என்றும் தெளிவாகிறது.

10.27 மேலும், மின்இணைப்பு (SC No.1336) பெறப்பட்ட வீடான கதவு எண்.5/42 தெற்கு தெரு சத்திரப்பட்டி என்ற முகவரியில்தான் காலம் சென்ற எம். அரப்ஷா குடும்பத்தினர் 35 வருடங்கள் வசித்து வருவதாக சத்திரப்பட்டி பள்ளிவாசல் ஜமாத் கமிட்டி கொடுத்த 24.11.15 நாளிட்ட சான்றிதழையும் திரு. A. ஷேக் அப்துல்லா இணைத்துள்ளார். அந்த சான்றிதழில் கூறியுள்ளவை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மின் இணைப்பு எண்.SC No.1336, கதவு எண்.5/42, தெற்குத் தெரு, சத்திரப்பட்டி, என்ற முகவரியில்தான் சத்திரப்பட்டி, முஸ்லீம் ஜமாத்தைச் சேர்ந்த லேட் எம். அரப்ஷா, குடும்பத்தார்கள் கடந்த 1980 முதல தற்போது வரை (2015) 35 வருடங்களாக குடியிருந்து வருகிறார்கள் என்ற தகவலை இதன் மூலம் சான்றளிக்கப்படுகிறது.*

*மேலும், திரு. லேட் எம். அரப்ஷா அவர்கள் கடந்த 2013–ல் காலமான பிறகு அவரின் மகன் A. ஷேக் அப்துல்லா, அவர்கள் மேற்படி முகவரியில் அவர் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறார் என்ற தகவலையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.*

*ஒப்பம் /xxxxx*
*சத்திரப்பட்டி ஜ"ம் ஆ"*

10.27 மேற்கண்ட சான்றிதழின்படி மின்இணைப்பு எண்.1336, கதவு எண்.5/42 தெற்குத் தெரு, சத்திரப்பட்டி, என்ற முகவரியில்தான் உள்ளது என்பதுவும் எம். அரப்ஷா 2013–ல் இறந்த பிறகு அவரது மகன் A. ஷேக் அப்துல்லா அந்த வீட்டில் குடியிருக்கிறார் என்பதுவும் தெரிகிறது.

10.28 மேலும், திரு. H.ஹைதர்கான் அவர்களின் பாக பிரிவினையிலுள்ள சொத்தின் ஷெட்யூலும் திரு. A. முஜிபுர் ரஹ்மான் பெயரிலுள்ள விற்பனை ஆவணத்திலுள்ள ஷெட்யூலும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"1 லக்கமிட்ட ஹைதர்கான் சாயபு அடையக் கூடிய சொத்துக்கள் விவரம்.*
*திண்டுக்கல் டி சத்திரப்படடி சப்டி சத்திரப்பட்டி கி கஸ் பா ஊர் கட்டில் 5 வது வார்டு 343 கதவு எண் உள்ள சிகஸ்த்துமனையிற்குமால் : பழனிச்சாமி என்ற பொன்னுச்சாமித் தேவர் வீட்டுக்கும் (வ) மதார் சாயபு வ வீட்டுக்கும் (மே) B ஷெடியூல் 2 லக்க நபர்பாக வீட்டுக்கும் இடத்துக்கும் (தெ) தென்வடபாதைக்கும் (கி) இதற்குள் கிழ மேல் ஜாதியடி 47 நாற்பத்தி ஏழு தென்வடல் ஜாதியடி 29 இருபத்தி ஒன்பது உள்ள இடமும் ஷெமாலுக்குள் மேல்புரம் சிகஸ்த்து மண்சுவர் வடக்குப்பார்த்த நாட்டு ஓடு வீடும் அதன் கதவு நிலை கட்டுக் கோப்பு சாமான்களும் மேற்கு முகமாக நடைபாதை பாத்தியமும் வாசலிடமும் சேர்த்து மதிப்பு*

*500.00*
*------*
*A ஷெட்யூல் மதிப்பு 500.00*
*------------*

***கிரைய சொத்துவிபரம்***

*பழனி பதிவு மாவட்டம், சத்திரப்பட்டி சார்பதிவகம், ஒட்டன்சத்திரம் வட்டம், சத்திரப்பட்டி கிராமம், நத்தம் சர்வே எண் 285, (நத்தம் நிலவரித்திட்ட கணக்கின்படி பட்டா எண் 191, சர்வே எண் 424/42) கதவு எண் 5/44 உள்ள வீட்டுக்கு மால்விபரம் :-*

*கிழமேல் பாதைக்கும் (தெற்கு),*

*கர்ணன், சேகர் இவர்கள் வீட்டுக்கும் (வடக்கு),*

*மதி, முஜிபுர் ரஹ்மான், சேகர் இவர்கள் வீட்டுக்கும் (மேற்கு),*

*சையதுஜாபர், அரப்ஷா பராமரிப்பில் உள்ள வீட்டுக்கும் (கிழக்கு),*

*இதற்குள் 135 சதுசர மீட்டர் அளவுள்ள இடமும்*

*இதில் வடபுறம் கிழமேல் அடி 21, தென்வடல் அடி 16 ஆக 336 சதுரடிக்கு 31.2 சதுர மீட்டர் அளவில் மண்தரை, மண்சுவர் பலஜாதி மரங்களைக்கொண்டு நாட்டோடு போட்டு சுமார் 70 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டுள்ள வீடும், இதன் கதவு நிலவு ஜன்னல் விட்டம் பிறவிடையும், மேற்படி வீட்டில் உள்ள மின் இணைப்பு எண் 105 உள்படவும்.*

*மேற்படி மாலுக்குள் மேற்படி வீட்டை ஒட்டி தென்புறம் கிழமேல் அடி 11, தென்வடல் அடி 16 ஆக 176 சதுரடிக்கு 16.4 சதுர மீட்டர் அளவில் மண்தரை மண்சுவர் பலஜாதி மரங்களை கொண்டு மங்களூர் ஓடு போட்டு சுமார் 40 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட வீடும் இதன் கதவு நிலவு ஜன்னல் விட்டம், பிறவிடையும் மேற்படி வீட்டில் மின் இணைப்பு இல்லை, மேற்படி வீட்டை ஒட்டி தென்புறம் கிழமேல் அடி 4 1/2 தென்வடல் அடி 3 1/2 ஆக16 சதுரடிக்கு 1.49 சதுர மீட்டர் அளவில் கட்டப்பட்டுள்ள பாத்ரூம் உள்படவும், மாமூல் பாதை பாத்தியமும்."*

10.29 மேற்கண்ட இரண்டு சொத்துக்களின் ஷெட்யூல்களையும் கூர்ந்து படிக்கும்பொழுது இரண்டும் வெவ்வேறு சொத்துக்கள் என்பது தெளிவாக புரிகிறது.

10.30 மேல்முறையீட்டாளர் 5/42 கதவு எண் உள்ள வீட்டில்தான் மின்இணைப்பு எண்.105 முன்பு இருந்தது என்றும் வாதிட்டுள்ளார். ஆனால், திரு. முஜிபுர் ரஹ்மானுக்கு காதர் பாட்சாவின் வாரிசுகள் எழுதிக்கொடுத்துள்ள விற்பனை பத்திரத்தின்படி அது 5/44 என்ற கதவிலக்க எண் உள்ள வீட்டில் இருந்துள்ளது என்று தெரிகிறது.

10.31 மேலும், மின்இணைப்பு எண்.105 திரு. மதர் சாய்பு என்ற பெயரில் வழங்கப்பட்டிருந்தது. மதர்சாய்பு அவர்களின் மகன் காதார்பாட்சாவின் வாரிசுகள் தான் மேற்படி இடத்தை திரு. முஜிபுர்ரஹ்மான் அவர்களுக்கு விற்பனை செய்துள்ளார்கள். அந்த வீட்டின் கதவு இலக்கம் 5/44

ஆகும். எனவே, மின்இணைப்பு எண்.105 இருந்த வீடு 5/44 என்ற கதவிலக்கம் கொண்டது என்று அறிய முடிகிறது.

10.32 கதவு எண்.5/44 உள்ள வீட்டிற்கான வரி ரசீதுகளின்படி அது திரு.காதர் பாட்சா அவர்களின் பெயரிலிருந்து தற்பொழுது A. முஜிபுர் ரஹ்மான் என்ற பெயருக்கு மாற்றம் ஆகி உள்ளது என்பது தெளிவாகியுள்ளதாலும் அதில் தான் மின்இணைப்பு எண்.105 இருந்தது என்பதாலும் திரு. அரப்ஷா என்பவர் பெயரில்தான் 5/42 கதவு இலக்கம் உள்ளது என்பதற்கு ஆதாரமாக 2000–2001 முதல் 2006–2007 வரை மற்றும் 2010–11, 2013–14, 2014–15 & 2015–16 ஆண்டுகளுக்கான வரி ரசீதுகளும் சமர்ப்பிக்கப்பட்டதாலும் சத்திரப்பட்டி ஜூம்அ பள்ளி வாசல் அளித்துள்ள சான்றுபடி தற்பொழுது மின் இணைப்பு எண்1336 உள்ள வீட்டின் கதவு எண். 5/42 என்பதாலும் திரு. தாவூத்கான் அவர்களின் வாதமான கதவு இலக்கம் 5/42 என்ற வீட்டின் ஆவணங்கள் பெறப்பட்டு மின்இணைப்பு 5/44 என்ற கதவிலக்கமுள்ள வீட்டில் வழங்கப்பட்டுள்ளது என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே, மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11. <u>முடிவுரை:</u>**

11.1 மேற்கண்ட பத்தி 10.32–ல் உள்ள தீர்வின்படி மின்இணைப்பு எண்.1336 கொடுக்கப்பட்டுள்ள இடம், விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களில் கூறப்பட்டுள்ள கதவு எண்.5/42 என்ற வீடு என்பதால் மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது.

11.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 36/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்

1) திரு. H. தாவூத்கான்,
த/பெ க. ஹைதர்கான்,
உதவி மின் செயற்பொறியாளர் (ஓய்வு),
66, வி.ஜி. ராவ் நகர்,
திருப்பூர் ரோடு,
உடுமலைப் பேட்டை வட்டம் – 642 126
திருப்பூர் – மாவட்டம்

2) செயற் பொறியாளர் / இ & ப
பழனி கோட்டம்
திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ஆர். எஸ். ரோடு
பழனி , திண்டுக்கல் மாவட்டம்.

3) உதவி செயற் பொறியாளர் / இ & ப/ கிராமியம்,
திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம்,
ஆர்.எஸ். ரோடு,
பழனி, திண்டுக்கல் மாவட்டம்.

4) உதவி பொறியாளர்/ இ & ப/ கிழக்கு சத்திரபட்டி,
திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம்
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தெற்கு தெரு, சத்திரபட்டி அஞ்சல்,
ஒட்டன் சத்திரம் – தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம்.

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

6) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

7) உதவி இயக்குநர் (கணினி) – மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.